**DEPOSITION OF WITNESS**

In the Court of District Munsif cum Judicial Magistrate, Cheyyur
CC Case No.61/2026
Prosecution witnesses. PW2, LW3

| | |
|---|---|
| பெயர். திருமதி.மங்களபிரியா | ஜாதி. |
| கணவர் பெயர்.திரு.குசலவன் | தொழில். |
| கிராமம். | சமயம். |
| தாலுக்கா. | வயது. |

**Solemnly affirmed in accordance with the provision of oaths Act 1969 on the 27 day of July, 2026**

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார்.

<u>முதல் விசாரணை</u>:-

1. நான் தற்போது வேலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. இதற்கு முன்பு நான் 2025 ம் வருடம் மதுராந்தகம் மதுவிலக்கு அமல் பிரிவல் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது கடந்த 23.02.2025 ம் தேதியில் நான், தலைமை காவலர் சீனிவாசன் மற்றும் முதல் நிலை காவலர் முத்து ஆகியோருடன் செய்யூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட இடங்களில் கண்காணித்து வந்தபோது எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் 8.00 மணிக்கு ரவிக்குமார் என்பவரது கழனிவெளி அருகே இருந்த பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த நீதிமன்ற ஆஜர் எதிரி சக்திவேல் முருகன், வயது 64, த/பெ.முனுசாமி மேட்டு தெரு, இரும்பேடு கிராமம் என்பவரை பார்ட்டி சகிதம் மடக்கி பிடித்து அவர் இருந்த இடத்தை சோதனை செய்தபோது சுமார் 5 லிட்டர் கொள்ளளவு கொண்ட 5 மண்பாணையில் சுமார் 23 லிட்டர் பனங்கள் இருந்தது. அதை முகர்ந்து பார்த்தபோது புளித்த வாடையுடன் வாய்குமட்டலும் வந்ததால் அவர் பனங்கள் இறக்கி விற்பனை செய்ய வைத்திருந்தது தெரிந்தது. மேற்படி குற்றத்திற்காக எதிரியை 8.15 மணிக்கு

கைது செய்து எதிரியிடம் இருந்த பனங்களை எங்கள் முன்னிலையில் 8.30 மணிக்கு நான் கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தேன். **(அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்பு 8.45 மணிக்கு அழித்தல் மகசர் தயார் செய்து எங்கள் முன்னிலையில் பாதுகாப்பான முறையில் பனங்கள்ளை கொட்டி அழித்து அழித்தல் மகசர் தயார் செய்தேன். **(அந்த அழித்தல் மகசர் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** . மேற்படி எதிரி தக்கபிணையில் விடுவிக்கப்பட்டார்.

3. பின்பு எதிரியுடன் காவல் நிலையம் வந்து எதிரி மீது நிலைய குற்ற எண்.81/2025, U/s.4(1)(C) TNP Act r/w 4(1)(d) TNP Act ல் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின் இறுதியாக விசாரணையை முடித்து எதிரி மீது கடந்த 24,02,2026 அன்று இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

சம்பவ இடம் எதனடிப்படையில் எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் காலை 8.00 மணிக்கு 23.02.2025 அன்று சென்றேன். எதிரியிடமிருந்து எத்தனை லிட்டர் கள் கைப்பற்றப்பட்டது என்றால் 23 லிட்டர். அந்த கள்ளை ஆய்விற்கு அனுப்பினேனா என்றால் இல்லை. அங்கேயே கொட்டி அழிக்கப்பட்டது. அந்த பனங்கள்ளை முகர்ந்து பார்த்தபோது விஷ நெடியுடன் கூடிய வாடை வந்து யாரேனும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டாரா என்றால் இல்லை. எதிரியை கைது செய்த போது பொதுஜன சாட்சிகளை ஏன் சேர்க்கவில்லை என்றால் அவர்கள் யாரும் முன்வரவில்லை. கைது செய்யும்போது வடகயிறு, கத்தி ஆகியவற்றை கைப்பற்றினேனா என்றால்

**இல்லை. புள்ளி விவர கணக்கிற்காக காவல் நிலையத்தில் இருந்துகொண்டு பொய் வழக்குக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்குக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.**

**(இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்படுகிறது)**

**மறு விசாரணை...** இல்லை

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

**Sd/-Tmt.C.M.Amaravathi**
District Munsif Cum Judicial Magistrate
Cheyyur.